RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-4 | இதழ்-36 | 05 பிப்ரவரி | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அதானி வீட்டு திருமணம்: மாற்றுத்திறனாளிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு

மும்பை, பிப்.5

தொழிலதிபர் கவுதம் அதானியின் மகன் ஜீத் அதானி மற்றும் திவா ஷா திருமணம் வரும் 7ம் தேதி நடைபெற உள்ளது. இதில் பிரபலங்கள் மட்டுமல்லாது மாற்றுத்திறனாளிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.



வழக்கமாக தொழிலதிபர்கள், திரை நட்சத்திரங்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் இல்ல திருமணம் என்றால் அதில் பல துறை பிரபலங்கள் பங்கேற்பது வழக்கம். கடந்த ஆண்டு முகேஷ் அம்பானியின் இளைய மகன் ஆனந்த் அம்பானி மற்றும் ராதிகா மெர்ச்சண்ட் திருமண நிகழ்வில் இந்திய தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள், சினிமா மற்றும் விளையாட்டு பிரபலங்கள் மட்டுமல்லாது உலகநாடுகளில் இருந்து முக்கிய நபர்கள் பலர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

இந்த சூழலில் இந்தியாவின் டாப் செல்வந்தர்களில் ஒருவராக உள்ள அதானி குழும தலைவர் கவுதம் அதானியின் மகன் ஜீத் அதானி மற்றும் சூரத்தை சேர்ந்த வைர வியாபாரி ஜெய்மின் ஷாவின் மகள் திவா ஷா திருமணத்திலும் பிரபலங்கள் அதிகம் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டது.

அது குறித்து சமூக வலைதளங்களில் வதந்தி பரவியது. எலான் மஸ்க் முதல் மன்னர் சார்லஸ் வரை இதில் பங்கேற்க உள்ளதாக ஜீத் அதானி திருமணம் குறித்த வதந்திகள் சமூக வலைத்தளத்தில் பரவின. மொத்தத்தில் பிரபலங்கள் சங்கமிக்கும் நிகழ்வாக அது இருக்கும் என சொல்லப்பட்டது.

"எங்கள் குடும்பத்தின் வளர்ச்சி சாமானிய தொழிலாள வர்க்கத்தை போன்றதாகும். ஜீத்தின் திருமணம் எளிமையான மற்றும் பாரம்பரிய முறைப்படி நடைபெறும்" என கடந்த மாதம் மகா கும்ப மேளாவில் பங்கேற்று கவுதம் அதானி தெரிவித்தார்.

இந்த சூழலில் தங்கள் திருமண விழாவில் பிரபலங்கள் மட்டுமல்லாது மாற்றுத் திறனாளிகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு ஜீத் அதானி மற்றும் திவா ஷா அழைப்பு விடுத்துள்ளனர். மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 'மித்தி கஃபே'வுக்கு நேரடியாக சென்று தங்களது திருமணத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

## பவுனுக்கு ரூ.840 உயர்வு: மீண்டும் புதிய உச்சத்தில் தங்கம்

சென்னை, பிப்.5



வாரத்தின் முதல் நாளான நேற்று தங்கம் விலை பவுனுக்கு ரூ.680 குறைந்து சற்றே ஆறுதல் அளித்த நிலையில் இரண்டாம் நாளான இன்று பவுனுக்கு ரூ.840 உயர்ந்து மீண்டும் ஒரு புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. கடந்த ஆண்டு, தீபாவளியின்போது அதிகபட்சமாக ஒரு பவுன் ரூ.59,000ஐ கடந்து விற்பனையானது. பின்னர், விலை குறைந்து, மீண்டும் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. ஒரு பவுன் தங்கம் விலை கடந்த ஜனவரி 22ம் தேதி ரூ.60,200, கடந்த 24ம் தேதி ரூ.60,440, கடந்த 29ம் தேதி ரூ.60,760, கடந்த 30ம் தேதி ரூ.60,880 என தொடர்ந்து அதிகரித்து, புதிய உச்சங்களை தொட்டது.

31ம் தேதி கிராமுக்கு ரூ.120 என பவுனுக்கு ரூ.960 அதிகரித்தது. இதனால், ஒரு கிராம் ரூ.7,730க்கும், ஒரு பவுன் ரூ.61,840க்கும் விற்பனையானது.

தொடர்ந்து மத்திய பட்ஜெட் எதிரொலியாக பிப்.1 அன்று தங்கம் விலை வரலாறு காணாத உச்சத்தை அடைந்தது. அன்றைய தினம் கிராமுக்கு ரூ.60 என பவுனுக்கு ரூ.480 அதிகரித்தது. இதனால், ஒரு கிராம் ரூ.7,790க்கும், ஒரு பவுன் ரூ.62,320க்கும் விற்கப்பட்டது.

கடந்த வாரம் முழுவதும் பல புதிய உச்சங்களைத் தொட்டு நகை வாங்குவோரை அதிர்ச்சியில் ஆழ்த்திய தங்கம் விலை இந்த வாரத்தின் முதல் நாளான நேற்று சற்றே குறைந்தது. ஆனால் இன்று மீண்டும் உயர்ந்து மற்றொரு புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.105 உயர்ந்து ஒரு கிராம் ரூ.7,810க்கும், பவுனுக்கு ரூ.840 உயர்ந்து ஒரு பவுன் ரூ.62,480க்கும் விற்பனையாகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 குறைந்து ஒரு கிராம் ரூ.106க்கு விற்பனையாகிறது. ஒரு கிலோ பார் வெள்ளி விலை ரூ.1,06,000 ஆக விற்பனையாகிறது.

## குடியரசுத் தலைவர் மீது விமர்சனம்! சோனியா காந்திக்கு எதிராக உரிமை மீறல் நோட்டீஸ்

புதுடில்லி, பிப்.5




குடியரசுத் தலைவரை விமர்சிக்கும் வகையில் கருத்து தெரிவித்தாக கூறி பாஜக எம்.பி.க்கள் நேற்று நாடாளுமன்றத்தில் சோனியா காந்திக்கு எதிராக உரிமை மீறல் தீர்மானத்தை கொண்டுவந்தனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல்நாளான ஜனவரி 31ம் தேதி நடைபெற்ற இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றினார். அப்போது மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் இலக்குகள் குறித்து அவர் எடுத்துரைத்தார். நாடாளுமன்றத்துக்கு வெளியே அவரின் உரை குறித்து சோனியா காந்தியிடம் கருத்து கேட்டபோது" உரையின் இறுதியில் குடியரசுத் தலைவர் மிகவும் சோர்வடைந்து விட்டார். அவரால் பேச முடியவில்லை. பாவம்" என்று தெரிவித்தார்.

அவரின் இந்த கருத்து குடியரசுத் தலைவரின் கண்ணியத்தை களங்கப்படுத்தும் வகையில் இருந்ததாக குடியரசுத் தலைவர் மாளிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. மேலும், குடியரசுத் தலைவரை அவமானப்படுத்தும் வகையில் பேசிய சோனியா, ராகுல், பிரியங்கா மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிடக்கோரி முசாபர்பூர் நகரத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவரும் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு பிப்ரவரி 10ம் தேதி விசாரணைக்கு வரவுள்ளது.

இந்த நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக சோனியா காந்திக்கு எதிராக நேற்று நாடாளுமன்றத்தில் பாஜக எம்.பி.க்கள் உரிமை மீறல் தீர்மானத்தை கொண்டு வந்தனர்.

## தமிழகத்தில் பிப்.8ம் தேதி பட்ஜெட் நகல் எரிப்பு போராட்டம்! முத்தரசன் அறிவிப்பு

சென்னை, பிப்.5



பட்ஜெட்டில் தமிழக மக்களை வஞ்சித்துள்ள மத்திய அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், வரும் 8ம் தேதி, தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் மத்திய பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம் நடத்தப்படும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்ட அறிக்கை: தமிழக அரசு கடந்த 3 ஆண்டுகளாக இயற்கை பேரிடர்களால் தொடர்ந்து தாக்கப்பட்டது. இந்த இயற்கை பேரிடர் இழப்புகளை ஈடு செய்ய தேசிய பேரிடர் நிதியுதவி கேட்டு மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததை நிதி நிலை அறிக்கையும் ஏமாற்றிவிட்டது.

புதிய ரயில் திட்டங்கள், இரட்டை வழி ரயில்பாதை அமைப்பு, ரயில் பாதை மின்மயமாக்கல், மெட்ரோ ரயில் விரிவாக்கம், மதுரை கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இப்படி எல்லா வழிகளிலும் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழக மக்களை வஞ்சித்துள்ள மத்திய அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில், வரும் 8ம் தேதி, தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகர்களில் மக்கள் விரோத பட்ஜெட் நகல் எரிப்புப் போராட்டம் நடத்தப்படும்.

இவ்வாறு முத்தரசன் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும் சூழல் மன்றங்கள் ஏற்படுத்தப்படும்! முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, பிப்.5




"தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சூழல் மன்றங்கள் ஏற்படுத்தப்படும். காலநிலை கல்வியறிவுக்கென ஒரு கொள்கையை தமிழக அரசு விரைவில் வகுத்து அறிவிக்கும். அனைவருக்கும் அவசியமான காலநிலை விழிப்புணர்வை மாணவர்கள் மூலமாக அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டுபோய் சேர்க்கவிருக்கிறோம். பல்வேறு துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்களுக்கும் காலநிலை மாற்றத்தடுப்பு மற்றும் தழுவல்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படும்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 3.ளி இன்று (பிப்.5) துவங்கியது. இந்த நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: "தமிழகத்தில் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, அதை எதிர்கொள்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் தொடர்ந்து, தமிழக அரசு எடுத்து வருகிறது. அதில் ஒருபகுதியாக என்னுடைய தலைமையில் காலநிலை மாற்ற நிர்வாகக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் குறித்து ஆராய, இந்திய மாநிலங்களிலேயே முதன்முதலாக மாநாடு நடத்துவது தமிழகம் தான். அதுமட்டுமின்றி, துறையின் பெயரையே சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை என்று மாற்றியிருக்கிறோம். இந்த வரிசையில், தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், பசுமை தமிழ்நாடு இயக்கம், தமிழ்நாடு ஈரநில இயக்கம், தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம், ஆகிய 4 சிறப்பு இயக்கங்கள் மூலமாக இதற்கான முன்னெடுப்புகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாகத்தான் ஆண்டுதோறும், காலநிலை உச்சி மாநாடுகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த மாநாடுகள் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் கீழ் வரும் தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை இரண்டு காலநிலை மாற்ற உச்சி மாநாடுகளை தமிழக அரசு வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்கிற வகையில், நம்மை தகவமைத்துக் கொள்வதற்கான விவாதங்களை முன்னெடுக்கிற தளமாக இந்த மாநாட்டை அரசு நடத்தி வருகிறது.

தமிழகத்தின் எதிர்காலத்துக்கான கனவுகள் அனைத்துக்கும் கல்விதான் அடித்தளமாக இருக்கிறது. அதனால்தான் தமிழக அரசு காலநிலை கல்வி அறிவை ஒரு இயக்கமாகவே முன்னெடுக்க முடிவு செய்திருக்கிறது. இதுதொடர்பாக ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிடுகிறேன்.


தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சூழல் மன்றங்கள் ஏற்படுத்தப் படும். காலநிலை கல்வியறிக்கென ஒரு கொள்கையை தமிழக அரசு விரைவில் வகுத்து அறிக்கவுள்ளோம். அனைவருக்கும் அவசியமான காலநிலை விழிப்புணர்வை மாணவர்கள் மூலமாக அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டுபோய் சேர்க்கவிருக்கிறோம். பல்வேறு துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்களுக்கும் காலநிலை மாற்றத்தடுப்பு மற்றும் தழுவல்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படும்.

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் வேளாண் உள்ளிட்ட துறைகளுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும். பசுமைக்குடில் வாயுக்களின் உமிழ்வை குறைப்பதற்கான வழிமுறைகள் காணப்படும். வெப்ப அலையை மாநில பேரிடராக தமிழக அரசு அறிவித்து அரசிதழில் வெளியிட்டுள்ளது.

வெப்ப அலையால் உயிரிழக்க நேரிட்டால், ரூ.4 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளோம். வெப்பநிலையை எதிர்கொள்வதற்கான மருத்துவ வசதிகள், மற்றும் ஓஆர்எஸ் கரைசல் வழங்க மாநில பேரிடர் மேலாண்மை நிதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்." என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## சட்டவிரோதமாக குடியேறியவர்களுடன் இந்தியா புறப்பட்ட அமெரிக்க ராணுவ விமானம்!

வாஷிங்டன், பிப்.5



அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை ஏற்றிக் கொண்டு அந்நாட்டு ராணுவ விமானம் ஒன்று இந்தியா புறப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால் விமானம் எப்போது அமெரிக்காவில் இருந்து புறப்பட்டது. எப்போது இந்தியா வந்து சேகிறது போன்ற தகவல்கள் ஏதும் இல்லை.

இந்நிலையில் இதுதொடர்பாக பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் ராய்ட்டர்ஸ் செய்திநிறுவனத்துக்கு அளித்தப் பேட்டியில், சி17 விமானம் ஒன்று சட்டவிரோதமாக குடியேறியவர்களுடன் இந்தியா சென்றுள்ளது எனக் கூறியுள்ளார்.

புள்ளிவிவரங்களின்படி சுமார் 18,000 இந்தியர்கள் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறி வசிப்பதாகத் தெரிகிறது. மொத்தமாக அமெரிக்காவில் 10.5 லட்சம் பேர் சட்டவிரோதமாக வசிப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்கா அமெரிக்கர்களுக்கே என்ற கோஷத்தை எழுப்பியே டொனால்டு ட்ரம்ப் பிரச்சாரம் செய்தார். அதற்குப் பெரும் வரவேற்பு நிலவியது. அதுவே டொனால்டு ட்ரம்ப் வெற்றிக்கு வழி வகுத்தது.

அமெரிக்காவின் புதிய அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற நாளில் இருந்து பல்வேறு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு செயல்படுத்தி வருகிறார். அதில் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை அவரவர் நாட்டுக்கே திருப்பி அனுப்புவது மிக முக்கியமான நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவில் அதிகளவு சட்டவிரோதமாக குடியேறுபவர்களில் இந்தியர்களும் பெரும் பங்கு வகிப்பதாக அந்நாட்டு தரப்பில் கூறப்படுகிறது. இந்த விவகாரத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரும் கூட "ஓர் அரசாங்கமாக அமெரிக்காவின் முடிவை ஆதரிக்கிறோம். அமெரிக்காவில் உள்ள சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை திருப்பி ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்." என்று கூறியிருந்தார். இந்நிலையில் தான், அமெரிக் காவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை ஏற்றிக் கொண்டு அந்நாட்டு ராணுவ விமானம் ஒன்று இந்தியா புறப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

7,000க்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள்: அமெரிக்க பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்களில் வெளிநாட்டு மாணவர்கள் கல்வி பயில எப் 1 விசா வழங்கப்படுகிறது. இதேபோல கல்வி சுற்றுலா வரும் வெளிநாட்டு மாணவ, மாணவியருக்கு எம் 1 விசா வழங்கப்படுகிறது.

இந்தியா, சீனா, பிரேசில், கொலம்பியா நாடுகளில் இருந்து எப்1, எம்1 விசா பெற்று அமெரிக்கா வரும் மாணவர்கள் விசா காலம் முடிந்த பிறகும் தொடர்ந்து சட்டவிரோதமாக தங்கி உள்ளனர். இதில் மிக அதிகபட்சமாக இந்தியாவை சேர்ந்த சுமார் 7,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கின்றனர். எச்1பி விசா பெற்றும் அமெரிக்காவில் பணியாற்றும் வெளிநாட்டினரும் விசா காலம் முடிந்த பிறகும் இங்கேயே தங்கி உள்ளனர்.

## தமிழகம் முழுவதுமே 144 தடை உத்தரவா? பாஜகவினர் கைதுக்கு அண்ணாமலை கண்டனம்

சென்னை, பிப்.5



அண்ணாமலை தனது சமூகவலைதளப் பக்கத்தில், "திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மலை தொடர்பான நிகழ்வுகளில், இந்து மத விரோதமாகச் செயல்படும் அமைப்புகளைக் கண்டித்தும், பாரபட்சமாகச் செயல்படும் திமுக அரசைக் கண்டித்தும், ஆலயத்தின் புனிதத்தைக் காக்க இன்று நடைபெறவிருந்த போராட்டத்தைத் தடுக்க, மதுரை மாவட்டம் முழுவதும் திமுக அரசு 144 தடைவிதித்துள்ளது.

ஆனால், தமிழகம் முழுவதுமே, 144 தடை உத்தரவு பிறப்பித்துள்ளது போல, பாஜக விருதுநகர் கிழக்கு மாவட்டத் தலைவர் பென்டகன் ஜி. பாண்டுரங்கன், கோயம்புத்தூர் நகர மாவட்டத் தலைவர் ரமேஷ், தூத்துக்குடி வடக்கு மாவட்டத் தலைவர் கு.சரவணகிருஷ்ணன், சேலம் நகர மாவட்டத் தலைவர் டிவி சசிக்குமார், மற்றும் பாஜகவினர் பலரையும் கைது செய்தும், வீட்டுக் காவலில் வைத்தும், ஜனநாயக விரோதமாக நடந்து கொள்கிறது திமுக அரசு.

அனைத்துக்கும் ஓர் எல்லை உண்டு. திமுக அமைச்சருக்கு ஒரு நியாயம், பொதுமக்களுக்கு ஒரு நியாயமா? பொறுமையும், சகோதரத்துவமும் கொண்ட தமிழக மக்களைச் சீண்டிக் கொண்டே இருக்கும் தேவையற்ற நடவடிக்கைகளுக்குத் துணை செல்வதை, திமுக அரசு உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். உடனடியாக, கைது செய்யப்பட்டவர்கள் அனைவரையும் விடுவிப்பதோடு, ஜனநாயக ரீதியாகப் போராட அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்." எனப் பதிவிட்டுள்ளார்

பிரச்சினையின் பின்னணி

திருப்பரங்குன்றம் மலையில் காசி விஸ்வநாதர் கோயில் சிக்கந்தர் தர்கா அமைந்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு சிக்கந்தர் தர்காவில் ஆடு, கோழி பலியிட்டு கந்தூரி விழா நடத்தப்படும் என தர்கா நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டது. இதையடுத்து திருப்பரங்குன்றம் மலைக்கு ராமநாதபுரம் எம்பி நவாஸ்கனி ஆட்களுடன் வந்தார். அப்போது எம்பியுடன் வந்தவர்கள் மலைப்பகுதியில் அசைவ உணவு சாப்பிட்ட புகைப்படம் சமூக வலைதளங்களில் வெளியானது. இவற்றால் திருப்பரங்குன்றம் மலைப் பிரச்சினை சர்ச்சையானது.


இந்நிலையில் திருப்பரங்குன்றம் மலையை பாதுகாக்க வலியுறுத்தி பிப். 4ல் இந்து முன்னணி மற்றும் இந்து அமைப்புகள் சார்பில் 16 கால் மண்டபம் அருகே ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதற்கு அனுமதி கோரி இந்து முன்னணியின் மதுரை மாவட்ட பொதுச் செயலாளர் கலாநிதி மாறன் திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் மனு அளித்தார். தொடர்ந்து இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இந்து மதத்தினர் திரண்டு வருமாறு இந்து அமைப்புகள் சார்பில் சமூக வலைதளங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

இந்தச் சூழலில் இந்து முன்னணி ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி மறுத்து திருப்பரங்குன்றம் காவல் உதவி ஆணையர் உத்தரவு பிறப்பித்தார். இந்நிலையில், திருப்பரங்குன்றத்தில் தடையை மீறி பிப். 4ல் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என இந்து முன்னணி தெரிவித்திருந்தது.

ஆனால் மதுரை மாநகரில் வெளிநபர்கள் பிரவேசிக்காத வகையில் 144 தடை உத்தரவு பிறப்பித்து ஆட்சியர் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து மலையைச் சுற்றி ஆயிரக்கணக்கான போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இதேபோல் தமிழகம் முழுவதுமே இந்து அமைப்பினர் ஆங்காங்கே கைது செய்யப்பட்டு வருகின்றனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தொழிலாளர் துறை சார்பில் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலவாரியம் மற்றும் இதர 17 நலவாரியங்களின் நலத்திட்டங்கள் தொழிலாளர்களுக்கு விரைவாக சென்றடைவதை உறுதி செய்ய ஏதுவாக உருவாக்கப்பட்ட மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், தொழிலாளர் உதவி ஆணையர்கே.எஸ்.ஆனந்த் பிரகாஷ், அரசு அலுவலர்கள், நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் பெரியகுளத்தில் அஇஅதிமுக பெரியகுளம் நகர் கழக செயலாளர் பழனியப்பன் தலைமையில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா 57 வது நினைவு தினத்தினை முன்னிட்டு பெரியகுளம் பழைய பேருந்து நிலைய வளாகப்பகுதியில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ பெரியவீரன்,பெரியகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜகுரு,நகர் கழக துணைச்செயலாளர் வெங்கடேசன்,மாவட்ட பிரதிநிதி விஜய் ஆனந்த்,கழக அம்மா பேரவை நகர் கழக செயலாளர் ஜெயசீலன் உள்பட கழக நிர்வாகிகள்,வார்டு செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கொடைக்கானல் அன்னை தெரசா கல்வியியல் கல்லூரியின் 12 ஆவது பட்டமளிப்பு விழா

கொடைக்கானல் பிப்5




திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அருகே உள்ள அட்டுவம்பட்டி பகுதியில் அமைந்துள்ள அன்னை தெரசா மகளிர் பல்கலை கழகத்தில் 12 ஆவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது, இந்த விழாவில் பல்கலை கழக கல்வியியல் கல்லூரி மாணவிகள் 96 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது.

பட்டங்களை அன்னை தெரசா மகளிர் பல்கலை கழக துணை வேந்தர் முனைவர் கலா வழங்கி மாணவ ஆசிரியர்களிடம் ஒரு ஆசிரியர் அதிக திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும், அப்போது தான் உங்கள் மாணவர்களை வாழ்க்கையில் முன்னேற முடியும் எனவும், ஆசிரியர் எப்படி நடக்க வேண்டும் என்பதில் முன்னுதாரணமாக திகழ வேண்டும் என தெரிவித்தார், அதனை தொடர்ந்து மாணவிகள் பட்டங்களை மகிழ்ச்சியுடன் வாங்கி சென்றனர், இந்த நிகழ்வில் தேர்வு கட்டுப்பாட்டாளர் முனைவர் கிளாரா தேன் மொழி, கல்வியியல் கல்லூரி முதல்வர் சரளா, கல்வியியல் துறை தலைவர் கேசி பிந்து

மற்றும் பேராசிரியர்கள், மாணவிகள் மாணவிகளின் பெற்றோர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர சுவாமி திருக்கோவில் வெள்ளாவி பொங்கல் மற்றும் அன்னதான விழா



தேனி.பிப்.5



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சலவைத் தொழிலாளர் சங்கத்திற்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர சுவாமி திருக்கோவில் வெள்ளாவி பொங்கல் மற்றும் அன்னதான விழா அன்று மேல் நடைபெற்றது. போடி அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் இருந்து பால்குடம் மற்றும் பொங்கல் பானை எடுத்துக்கொண்டு ஊர்வலமாக புறப்பட்டு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர சுவாமிக்கு பால் அபிஷேகமும், சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சங்க உறுப்பினர்கள் வெள்ளாவி பொங்கல் வைத்து வழிபட்டனர். மதியம் 12 மணிக்கு மேல் பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருவிழாவினை சிறப்பாக வழி நடத்தியவர்கள் சலவை தொழிலாளர் சங்கம் ஸ்ரீ வீரபத்திர சுவாமி மற்றும் இளைஞர் அணி மற்றும் ஊர் பொதுமக்களும் குடும்பத்துடன் கலந்து கொண்டு வீரபத்திர சுவாமி அருளைப் பெற்றுச் சென்றனர்.

# தேனியில் பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலில் பொதுவிருந்து



தேனி, பிப்.5

தேனி மாவட்டம், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, இந்து சமய அறநிலைத்துறையின் சார்பில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கதமிழ்செல்வன் முன்னிலையில் தொடங்கி வைத்தார்கள்.

இந்து சமய அறநிலைத் துறையின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுவிருந்தில் பொதுமக்களுக்கு உணவுகளை வழங்கி, அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலில் நேர்த்தி கடனாக வழங்கப்பட்ட பருத்தி புடவை மற்றும் வேஷ்டிகளை 50 ஏழை எளியோருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தானமாக வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் வீரபாண்டி பேரூராட்சித் தலைவர் கீதாசசி, செயல்அலுவலர் நாராயணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை எழும்பூரில் தமிழ்நாடு தொழில்முனைவோர் மன்றம் சார்பில் 11 சாதனை தொழில்முனைவோருக்கு விருது வழங்கி கவுரவிப்பு

எழும்பூர் பிப்.5




சென்னை எழும்பூரில் உள்ள அசோகா ஹோட்டலில், தமிழ்நாடு தொழில் முனைவோர் மன்றம் சார்பில் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிகழ்ச்சி மற்றும் சாதனை தொழில்முனைவோருக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்சிக்கு தமிழ்நாடு தொழில்முனைவோர் மன்றத்தின் தலைவர் ராமேஷ் பாபு தலைமை தாங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குனர் டாக்டர் டி.எஸ். செல்வவிநாயகம், பேராசிரியர் சுரேஷ் கண்ணன் மற்றும் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாமில் ஆலோசகர் பொன்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழகம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 100க்கு மேற்பட்ட பல இளம் தொழில் முனைவோர்கள இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளில் சிறந்த தொழில் முனைவோருராக விளங்கும் 11நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கபட்டது. அதன்படி சிறப்பு விருந்தினர்கள் டாக்டர் செல்வவிநாயகம், பொன்ராஜ், சுரேஷ் கண்ணன் ஆகியோர் 11பேருக்கு சிறந்த தொழில் முனைவோர் காண விருதினை வழங்கினர்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மன்றம் மூலம் இளம் தொழில் முனைவோர்கள் தங்களது பொருட்களை மக்களிடம் சேர்க்கவும் மற்ற தொழில் முனைவோர்களோடு இணைந்து செயல்படவும் வழிவகை செய்கின்றன. மேலும் தொழில்முனைவோராக வரவிரும்பு நபர்களுக்கும் தொழில்முனைவு வழிகாட்டியாகவும் செயல்படுவதாக அதன் தலைவர் ரமேஷ்பாபு தெரிவித்தார்.





சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வட்டம் நரி கோட்டை அருகே உள்ள கருவேல் மரங்களை சுற்றி வசிக்கும் பொதுமக்கள் மற்றும் அருகில் உள்ள கிராமங்களுக்கு செல்லும் பகுதிகளில் அதிகமான குடியிருப்பு இருந்து வருகிறது நீண்ட நாட்களாக கருவேல் மரங்கள் மண்டி செடி கொடிகளால் அப்பகுதி அருகில் குடியிருக்கும் மக்களுக்கு இடையூறாக இருந்தது. அதுமட்டும் அல்லாது விஷ ஜந்துக்களால் பாதிப்பு ஏற்பட்ட வண்ணம் உள்ளதாக தெரிய வந்த நிலையில் மேலும் இரவு நேரங்களில் அப்பகுதியில் காடுகள் மண்டியிருந்த சூழலால் கனிம கொள்ளை ஏற்பட்டதாகவும் அப்பகுதியில் கூறப்பட்டிருந்தது இதை அடுத்து அப்பகுதியில் உள்ள கருவேல்களை சுத்தம் செய்து உதவியது போல் அடர்ந்து அருகில் இருக்கும் கருவேல்களையும் சுத்தம் செய்ய பொதுமக்கள் கூறி வருகின்றனர் நரி கோட்டையை பகுதியை சுத்தம் செய்து மேலும் வழித்தடங்களை தூய்மையாக வைத்து அப்பகுதிவழியாக செல்லும் குடியிருப்புகளுக்கு ஏதுவாக உதவி செய்த மாவட்ட ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் அவர்களுக்கு அப்பகுதி வாழ் பொதுமக்கள் மற்றும் சமூக அலுவலர்கள் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

# சென்னை ஓ.எம்.ஆர்.படூர் அகடாமி பள்ளி மாணவர்களே தயாரித்த பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சி

கேளம்பாக்கம் பிப்.5





சென்னை ஒ.எம்.ஆர்.படுர் (ஷரத்தா) shraddha Childrens அகடாமி பள்ளி மாணவர்களுக்கு தொழில்முனைவோர் குறித்து பயிற்சி அளிக்கும் வகையில் மாணவர்களே தயாரித்த பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சி வெகு சிறப்பாக நடைபெற்றது.

சென்னை ஒ.எம்.ஆர். படுரில் உள்ள ஷரத்தா (shraddha children's academy) குழந்தைகள் அகடாமி சார்பில் இளம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் பள்ளி வளாகத்தில் பள்ளி மாணவர்களையும் தொழில்முனைவராக்கும் வகையில், பள்ளி மாணவர்களே வீட்டில் தயாரித்த பொருட்களை கண்காட்சி படுத்தி விற்பனை செய்யும் பள்ளி வளாகத்தில் நடைப்பெற்றது. தொடர்ந்து 3வது ஆண்டாக நடைபெறும் இந்த கண்காட்சியில் 200க்கும் மேற்பட்ட அரங்குகளை மாணவர்கள் அமைத்திருந்தனர்.

இதில் பிரதனமாக உணவு பொருட்கள் கண்காட்சி அமைந்திருந்தது. மாணவர்கள் சமைத்த பல்வேறு பொருட்களை அவர்களே நேரடியாக விற்பனை செய்தனர். அதேபோல் உணவு பொருட்கள் மட்டுமின்றி

அழகுசாதன பொருட்கள், கைவினை பொருட்கள், மேக்கப் பொருட்கள், மெகந்தி, விளையாட்டுகள், நடனம், பாடல் என கிராமத்து திருவிழாவை நேரில் காண்பது போல் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த கண்காட்சியில் பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டு மாணவர்களின் தாயாரிப்புகளை வாங்கி மாணவர்களுக்கு ஊக்கமளித்தனர்.

இந்த கண்காட்சி மூலம் கிடைக்கும் நிதியை பொருளாதாரத்தில் பின் தங்கிய பள்ளி மாணவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்படும் எனவும் பள்ளி நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தேசிய குடற்புழு சிகிச்சை முகாமிற்கான முன்னேற்பாடு ஒருங்கிணைப்பு குழு கூட்டம்






தென்காசி, பிப்.5

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தென்காசி மாவட்டத்தில் வருகிற பிப்ரவரி 10ஆம் தேதி அன்று நடைபெற உள்ள தேசிய குடற்புழு சிகிச்சை முகாமிற்கான முன்னேற்பாடுகள் பற்றிய மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது,

குடற்புழு மாத்திரை உட்கொள்வதினால் குழந்தைகளுக்கு குடற்புழுவினால் ஏற்படும் இரத்தசோகையை தடுக்கவும், நோய் எதிர்ப்பு சக்தி, அறிவுத்திறன், உடற் வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கு உதவுகிறது. ஆகவே மாவட்டத்திலுள்ள அனைத்து துறை அலுவலர்களும் குறிப்பாக ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து துறை, பள்ளிக் கல்வித்துறை, உள்ளாட்சி துறை ஆகியோர் பொது சுகாதார துறை சார்ந்த அலுவலர்கைளுக்கு வேண்டிய உதவிகளை மேற்கொண்டு தேசிய அளவில் நடைபெறுகின்ற இந்த முகாமில் நூறு சதவீதம் பயனாளிகள் தென்காசி மாவட்டத்தில் பயன்பெறும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் தேவையான ஏற்பாடுகளை வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார். இக்கூட்டத்தில், அனைத்துதுறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கன்னியாகுமரி பூதப்பாண்டி அரசு மருத்துவமனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு



கன்னியாகுமரி, பிப்.5

கன்னியாகுமரி மாவட்டம் பூதப்பாண்டி அரசு தாலுகா மருத்துவமனை, பூதப்பாண்டி குழந்தைகள் மையம், பூதப்பாண்டி கனரா வங்கி உள்ளிட்டவைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்ட பூதப்பாண்டி அரசு தாலுகா மருத்துவமனையை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மகப்பேறு பகுதியை ஆய்வு செய்து மருத்துவமனையில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை, குழந்தைகளுக்கு போடப்படும் தடுப்பூசி முறைகளை உள்ளிட்டவைகள் ஆய்வு மேற்கொண்டதோடு, பிரசவ பின் கவனிப்பு வார்டை ஆய்வுசெய்து அங்கு பிரசவித்த தாய்மார்களிடம் மருத்துவர்கள் கனிவுடன் கவனிக்கிறார்களா?, உணவு சுகாதாரமாக வழங்கப்படுகிறதா?, அரசின் தாய்சேய் நல பெட்டகம் மற்றும் பிற நலத்திட்ட உதவிகள் கிடைக்கிறதா என கேட்டறியப்பட்டது. எடை குறைவாக பிறக்கும் குழந்தைகளின் மீது சிறப்பு கவனம் செலுத்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் மருத்துவமனையானது வளமிகு வட்டார திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டு பிரசவ முன்கவனிப்பு பரிசோதனை காத்திருப்பு அறையில் தனியார் மருத்துவமனைகளுக்கு நிகராக குளிர்சாதன வசதி, 24 மணி நேரமும் வெந்நீர் வசதி, பிரசவ பகுதியில் ஒவ்வொரு படுக்கைகளுக்கு இடையேயும் திரைச்சீலை மறைப்பு வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட உள்ளதால் அதன் மூலம் அரசு மருத்துவமனையில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை உயர்த்த முடியும் என மருத்துவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. பிரசவ பகுதியில் தாய்மார்களிடம் கலந்துரையாடி நீங்கள் சத்தான உணவுகளை எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும், குழந்தைக்கு 6 மாதங்கள் வரை தாய்ப்பால் மட்டுமே ஊட்ட வேண்டும் எனவும், பிரசவ காலத்திற்கு முன்போ அல்லது பின்போ எந்த பிரச்சனை ஏற்பட்டாலும் உடனே அரசு மருத்துவமனையை அணுக வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து 108 ஆம்புலன்ஸ் சேவையை விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கு மட்டும் அன்றி பிரசவ காலத்தில் மருத்துவமனையை அணுகுவதற்கும் பிரசவ பின் கவனிப்புக்காகவும், பச்சிளங் குழந்தைகளை மருத்துவ மனைகளில் தொடர் கவனிப்புக்கு கொண்டு செல்வதற்கும் பயன்படுத்த வேண்டும் எனவும், மருத்துவமனையின் உள்நோயாளிகளுக்கு விரிக்கப்பட்ட படுக்கை விரிப்புகளை தினமும் மாற்றும் வண்ணம் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட நிறத்தில் படுக்கை விரிப்புகளை பயன்படுத்த வேண்டும் எனவும், வார்டுகளின் தரை மற்றும் சுவர்பகுதியில் கறைகள் இல்லாதவாறு தினமும் சுத்தம் செய்ய வேண்டும் எனவும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் ஆய்வகத்தில் செய்யப்படும் பரிசோதனை விவரங்களை கேட்டறிந்து நீரிழிவு நோய், ஆஸ்துமா, சிறுநீரக குறைபாடு, எடை குறைவு உடையோர், 60 வயதுக்கு மேற்பட்டோர் ஆகியோருக்கு சளி பரிசோதனை கண்டிப்பாக செய்ய வேண்டும் எனவும், இதன்மூலம் காசநோயை ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து குணப்படுத்த வேண்டும் என மருத்துவர்கள், செவிலியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து தோவாளை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூதப்பாண்டி குழந்தைகள் மையத்தை ஆய்வு மேற்கொண்ட போது குழந்தைகள் மையத்தில் 6 குழந்தைகள் இருந்தனர். குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டியான இணை உணவு கொழுக்கட்டை வழங்கப்பட்டது. அங்கன்வாடி பணியாளர்களால் பராமரிக்கப்படும் பதிவேடுகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட கைபேசியில் போஷன் ட்ராக்கர் செயலியில் உள்ளீடு செய்யப்பட்ட பயனாளிகளின் விபரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. செயலியில் முழுமையாக குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்ட விபரங்கள் பதிவு செய்யப்படாதது குறித்து துறை அலுவலரிடம் விளக்கம் கேட்கப்பட்டு 2 நாட்களுக்குள் அனைத்து குழந்தைகளின் தடுப்பூசி விபரங்கள் போஷன் ட்ராக்கர் செயலியில் பதிவு செய்ய துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடம் அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து பூதப்பாண்டி கனரா வங்கியினை நேரில் ஆய்வுமேற்கொண்டு கலைஞர் கைவினைத்திட்டம் குறித்து துறைசார்ந்த அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பிராபகரன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், வட்டார மருத்துவ அலுவலர் மரு.தா.ராஜ்குமார், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஜெயந்தி, மாவட்ட திட்ட அலுவலர் மற்றும் தோவாளை குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர், செவிலியர்கள், மருத்துவர்கள், துறை அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## சிவகங்கை மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கிய ஆட்சியர்






சிவகங்கை, பிப்.5

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 301 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்துநடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், அறிவுறுத்தினார்.

மேலும், தொழிலாளர் உதவி ஆணையத்தின் சார்பில் தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் அமைப்புச்சாரா நலவாரியத்தின் கீழ், பணியிட விபத்தில் மரணமடைந்த பதிவு பெறாத வெளி மாநில கட்டுமானத் தொழிலாளரின் குடும்பத்தினருக்கு, ரூ.5,00,000/ மதிப்பீட்டிலான பணியிடத்து விபத்து மரணம் உதவித்தொகைக்கான ஆணையினையும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,01,800/ வீதம் மொத்தம் ரூ.2,03,600/ மதிப்பீட்டிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூடர்களையும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.15,750/ மதிப்பீட்டிலான மடக்கு சக்கர நாற்காலியினையும், 02 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.2,780 வீதம் மொத்தம் ரூ.5,560/ மதிப்பீட்டிலான காதொலி கருவிகளையும் என மொத்தம் 06 பயனாளிகளுக்கு ரூ.7,24,910/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி உட்பட அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.67.6 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளை ஆட்சியர் ஆய்வு



தேனி, பிப்.5

தேனிமாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேக்கம்பட்டி, ரெங்கசமுத்திரம், கோவில்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஊரகவளர்ச்சித்துறை சார்பில் ரூ.67.6 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி. ஷஜீவனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தேக்கம்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் நர்சரி கார்டன் அமைக்கப்படும் பணிகளையும், ரெங்கசமுத்திரம் ஊராட்சி நாச்சியார்புரத்தில் ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் ரூ.13.50 இலட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் கட்டப்பட்டு வரும் பணிகளையும், தூய்மை பாரத திட்டத்தின் கீழ் ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டில் வாறுகால் அமைக்கப்படும் பணிகளையும், நாச்சியார்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதித் திட்டத்தின்கீழ் ரூ. 14 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் கட்டப்பட்டு வரும் பணிகளையும், ரெங்கசமுத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் ஆய்வு செய்து இந்த திதியாண்டிற்கு வழங்கப்பட்டுள்ள கடன்கள் குறித்து கேட்டறிந்தார். மேலும், அங்குள்ள நியாயவிலைக்கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் போதுமான அளவு இருப்பில் உள்ளதா என நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பின்னர், நாச்சியார்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் உள்ள சத்துணவு மையத்தில் அரசு வழிகாட்டுதலின்படி உணவு வழங்கப்படுகிறதா என்றும், சத்துணவு கூடம் தூய்மையாக பராமரிக்கப்படுகிறதா என்றும் மேலும், மாணவர்களுக்கு தயாரிக்கப்பட்டிருந்த மதிய உணவின் தரம் குறித்து உணவருந்தி பார்த்து ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, ரெங்கசமுத்திரத்திரத்தில் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் கனவு இல்லம் கட்டுமான பணிகளையும், ஆதிதிராவிடர் காலனியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடம் என மொத்தம் ரூ.67.6 இலட்சம் மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள் .

பணிகளை அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, தேனி மாவட்ட சிறைச்சாலையில் ஆய்வு மேற்கொண்டு கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும், நூலகத்தில் பராமரிக்கப்படும் புத்தகங்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

இவ்வாய்வில் மாவட்ட வழங்கல் அலுவலர் மாரி செல்வி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணக்குமார், பொறியாளர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## தேனி மாவட்டத்தில் 5 வயதுகுட்பட்ட குழந்தைகளுக்கான ஆதார் அட்டை பதிவு மையத்தினை தொடங்கி வைத்த ஆட்சியர்



தேனி, பிப்.5

தேனி மாவட்டம், தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் 5 வயதுகுட்பட்ட குழந்தைகளுக்கான ஆதார் அட்டை பதிவு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, தொடங்கி வைத்தார்கள்

ஆதார் என்பது ஒவ்வொரு தனி நபரின் தனித்துவமான அடையாளத்தை குறிக்கிறது. ஆதார் அட்டையை அடையாளச் சான்றாகவும், முகவரிச் சான்றாகவும், வயதுச் சான்றாகவும் பயன்படுத்தலாம். மாவட்டத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் ஆதார் அட்டை பதிவு கட்டாயம் ஏற்படுத்தி தர வேண்டும். தமிழ்நாட்டிலே முதன் முறையாக தேனி அரசு மருத்துவ கல்லூரியில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான ஆதார் அட்டை பதிவு மையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. .மேலும், குழந்தைகளின் ஆதார் பதிவிற்கு குழந்தைகளின் பிறப்பு சான்றிதழ் (அசல்), பெற்றோரின் தொலைப்பேசி எண்ணுடன் கூடிய இஆதார் குறிப்பாக பிறப்பு சான்றிதழ் மற்றும் பெற்றோரின் இஆதாரில் பெயர் மற்றும் முகவரி ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.முத்து சித்ரா, கண்காணிப்பாளர் மரு.விஜய ஆனந்த், துணை முதல்வர் மரு.தேன்மொழி, நிலைய மருத்துவர் மரு.சிவக்குமார், உதவி நிலைய மருத்துவர் மரு.மணிமொழி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தேவகோட்டையில் இருந்து பழனிக்கு காவடிகள் எடுத்து பாதயாத்திரையாக புறப்பட்ட பக்தர்கள்



தேவகோட்டை பிப்.5

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகரில் இருந்து தைப்பூச திருநாளை முன்னிட்டு பழனிக்கு பக்தர்கள் காவடிகள் எடுத்து பாதயாத்திரையாக செல்வது வழக்கம், அதேபோல் இந்த ஆண்டு நகரத்தார்கள் நகர பள்ளிக்கூடத்தில் காவடிகள் கட்டப்பட்டு நேற்று சிறப்பு பூஜைகள் செய்து அரோகரா பாடி வேலுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. 30125காலை தோரணைகள் ‘பரிவட்ட வேடிக்கை யுடன் மேளதாளங்கள் முழங்க சுமார் 42 காவடிகள் சிவன் கோவில் வழியாக நகரின் முக்கிய வீதிகளில் வலம் வரும் காவடிகளுக்கு வீட்டின் அருகே வந்த வேலுக்கு பன்னீரால் அபிஷேகம் செய்து பிரசாதங்கள் பெற்றும் காவடிகளுக்கு துண்டுகள் சால்வைகள் அணிவித்தும் மரியாதை செலுத்தினர்.

விநாயகர் கோவிலில் வைத்து சிறப்பு பூஜை செய்து அதனைத் தொடர்ந்து 4125 காலை சிறப்பு பூஜை செய்து தேவகோட்டையில் நகரத்தார் காவடிகள் 42 முதலியார் காவடி 1 மொத்தம் 43 காவடிகள் பழனிக்கு பாதயாத்திரையாக புறப்பட்டு செல்லும்பொழுது தேவகோட்டை எல்கையில் காவடிகள் வழி நெடுகிலும் மயில் போன்று ஆட்டம் ஆடியது. பின்னர் கட்டியம் பாடல் பாடி வழி அனுப்பி வைத்தனர். காவடிகள் வரும் வழியில் வேலுக்கு பன்னீர் அபிஷேகம் எலுமிச்சம்பழம் மாலைகள் அணிவித்து காவடிகளுக்கு துண்டு அணிவித்து பக்தர்கள் பொதுமக்கள் வழிபட்டனர மேலும் ஆயிரக்கணக் பக்தர்களும் அவர்களுடன் செல்கின்றனர்.

நகரத்தார்கள் காவடிகள் எடுக்க பல்வேறு அயல்நாடு மற்றும் பிற நகரங்களில் வசித்து வந்தாலும் தங்களது நேர்த்திக்கடனை செலுத்த சொந்த ஊருக்கு வந்து காவடி எடுத்துச் செல்வது வழக்கமாக கொண்டுள்ளனர் மேலும் வழி நெடுகிலும் பொதுமக்கள் தங்களால் முடிந்த அளவு பக்தர்களுக்கு உணவு இனிப்பு பழங்கள் பிஸ்கட்டுகள் வழங்கினர்..

மாலை தந்தி

05.02.2025





தென்காசிமாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக் கொண்டார். பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்ணான்டோ, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயப்பிரகாஷ், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி.மதி இந்திரா பிரியதர்ஷினி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) செல்வக்குமார், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) ஷேக் அயூப் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் தெப்பத் திருவிழா2025 நடைபெறுவதை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் இணை ஆணையர் செயல் அலுவலர் ச.கிருஷ்ணன் உடன் உள்ளார்.

## பழனியில் த.வெ.க சார்பில் அறிமுக கூட்டம் இரண்டாம் ஆண்டு தொடக்க விழா - பேரணி

பழனி, பிப்.5

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் புதிய பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம் , கட்சியின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழா மற்றும் பேரணி நடைபெற்றது.

திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளராக அறிவிக்கப்பட்ட கார்த்திக் ராஜன் ,மாவட்ட இணைச் செயலாளர் சிவா, மற்றும் செயற்குழு உறுப்பினர் பாலன் ஆகியோருக்கு திண்டுக்கல் மேற்கு மாவட்ட பழனி நகர ஒன்றிய கிளை நிர்வாகிகள் சார்பாக பட்டாசு வெடித்து மலர் தூவி வரவேற்பு அளிக்கப்பட்டது.

முன்னதாக கட்சியின் இரண்டாம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு பொது மக்களுக்கும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கி கொண்டாடப் பட்டது.

இதனிடையே பேரணி சென்றவர்கள் திருஆவினன்குடி மற்றும் மாரியம்மன் கோயிலில் கட்சித் தலைவர் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவரின் பெயரிலும் அர்ச்சனை செய்து சிறப்பு பூஜைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.மேலும் பேரணியின் போது பெரியார், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். ஆகியோர் சிலைகளுக்கு மாலை அணிவித்து கட்சி பொறுப்பாளர்கள் மரியாதை செலுத்தினர்.இந்த நிகழ்வுகளில் திண்டுக் கல் மேற்கு மாவட்ட பழனி நகர ஒன்றிய கிளை நிர்வாகிகள் மற்றும் தமிழக வெற்றி கழக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.





## தூத்துக்குடி கீதாமெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 20வது ஆண்டு விழா! அமைச்சர் பங்கேற்பு

தூத்துக்குடி, பிப்.5

தூத்துக்குடி கீதாமெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 20வது ஆண்டு விழா போல்பேட்டை பள்ளிவளாகத்தில் நடைபெற்ற விழாவிற்கு பள்ளியின் செயலாளர் ஜீவன்ஜேக்கப் வரவேற்புரையாற்றினார். தலைமை ஆசிரியர் ஜெஸிந்தா ஆண்டறிக்கை வாசித்தார்.





விழாவில் அதிக மதிப்பெண் எடுத்து தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி கோட்டாட்சியர் பிரபு, வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் ஆகியோர் பரிசுகள் வழங்கினார்கள்.

பின்னர் அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில் உங்களுடைய ஆதரவோடு திறமையின் வெளிப்பாடாக வருடம் தோறும் ஆண்டுவிழா நடைபெறுகிறது. நமக்கு கல்விதான் முக்கியம் அதுதான் எதிர்காலத்தில் உங்கள் வாழ்வில் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது. உங்களுடைய தாய் தந்தையர்கள் எவ்வளவு சிரமப்பட்டுதான் படிக்கவில்லை என்றாலும் தன்பிள்ளைகள் படிக்க வேண்டும் நல்ல நிலைக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தில் படிக்க வைக்கிறார்கள். என்பதை எண்ணிப்பார்த்து புத்தகத்தை ஆரம்பம் முதல் கடைசி வரை முழுமையாக படிக்க வேண்டும் அதுதான் உங்களுக்கு மூளையில் பதிவு செய்யப்படும் தகவல்களாகும். நல்ல வாய்ப்பை உங்களுக்கு சொல்லி கொடுக்கும் ஆசிரியர்களின் அறிவுரைகளும் ஆரோக்கியமானதாக இருக்கும். 2030ம் ஆண்டு தமிழகம் மிகப்பெரிய வளர்ச்சியடைந்து மாநிலமாக இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் பணியாற்றி வரும் சூழ்நிலையில் அதே போல் நாமும் சாதித்து இந்த பள்ளிக்கும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்த்து எதிர்காலத்தில் தமிழகத்தின் பெருமையை உலக அளவில் எடுத்துச்செல்ல வேண்டும். என்று பேசினார்.

விழாவில் பள்ளி நிர்வாக குழுவை சேர்ந்த சுதன்கீலர், மகிழ்ஜான், கீர்த்தனா, சுதாசுதன், ஜீனா, மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஆசிரியர் காளிஸ்வரி நன்றியுரையாற்றினார்.





சிவகங்கை மாவட்டம் முத்தனேந்தல் அருகே மதுரைராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் துத்திக்குளம் விலக்கில் TN65AH9505 என்ற பதிவு எண் கொண்ட டாட்டா ஏசி வாகனம் வெள்ளை சாக்குகளில் மூட்டையாக ஏற்றி வந்தது ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து சாலையில் கவிழ்ந்தது ஓட்டுநர் தப்பி ஓடிய நிலையில் அங்கிருந்த பொதுமக்கள் சிதறி கிடந்த மூட்டைகளை பார்த்ததில் உயர்ரக இலைகள் இருந்தது இந்த விபத்து குறித்து உடனடியாக காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்...

## இந்தியாவில் புற்றுநோயை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக இந்திய அரசாங்கம் வகைப்படுத்த மருத்துவர்கள் வலியுறுத்தல்

மதுரை, பிப் 5

அப்போலோ புற்றுநோய் மையம், மதுரை, இந்திய மருத்துவ சங்கம் (ஐ.எம்.ஏ), இந்திய அறுவை சிகிச்சை புற்றுநோயியல் சங்கம், மற்றும் மதுரை புற்றுநோய் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து, உலக புற்றுநோய் தினமான பிப்ரவரி 4 அன்று "ஒன்றிணைந்து அறிவிப்போம்" என்ற தேசிய பிரச்சாரத்தைத் தொடங்கி இருக்கிறது. இந்திய அரசாங்கம் புற்றுநோயை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக வகைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது, இது நோயை எதிர்த்துப் போராடுவதற்கான முதல் படியாக அமையும்.





மதுரை அப்போலோ புற்றுநோய் மையத்தை சேர்ந்த மருத்துவ புற்றுநோயியல் நிபுணர்கள் டாக்டர். முத்து குமாரசாமி, தேவானந்த், தீனதயாளன், அறுவை சிகிச்சை புற்றுநோயியல் நிபுணர்கள் சர்ப்பராஜன், பாலு மகேந்திரா, கதிரியக்க புற்றுநோயியல் நிபுணர் சதீஷ் ஸ்ரீனிவாசன் ஆகியோர் கூறுகையில், "அப்போலோ புற்றுநோய் மையத்தில், நாங்கள் ஏற்கனவே ஒரு வலுவான புற்றுநோய் மருத்துவ சிகிச்சையை கட்டமைத்துள்ளோம், இது புற்றுநோய் தன்மைகள் மற்றும் அதன் விளைவுகளைக் கண்காணிக்க உதவுகிறது. இப்போது நாங்கள் எஐ போன்ற தொழில்நுட்ப உதவியுடன் மேலும் இந்தியாவில் சிறந்த புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சியை செயல்படுத்த உறுதி கொண்டுள்ளோம் ஆகவே அரசாங்கம் மேலவை மற்றும் கீழவை ஆகிய இரண்டிலும் இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்."

மதுரை இந்திய மருத்துவ சங்கத்தின் (ஐ.எம்.ஏ) துணைத் தலைவர் டாக்டர்.யி.ஜெபசிங், கூறுகையில், "புற்றுநோயை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக மாற்றும் இந்த முயற்சியில் ஐ.எம்.ஏ உறுதியாக நிற்கிறது. இந்த முதல் படி நமது தற்போதைய புற்றுநோய் மருத்துவ சிகிச்சை அமைப்பில் உள்ள இடைவெளிகளைக் குறைக்கும் மற்றும் புற்றுநோயை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக மாற்றுவதன் மூலம், அனைத்துபுற்றுநோய்களுக்கும் அறிக்கையிடப்பட்டு ஆவணப்படுத்தப்படுவதை உறுதி செய்ய முடியும், இது புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், இறந்தவர்கள் மற்றும் உயிர்பிழைத்தவர்களின் விகிதங்களைக் கண்காணிக்க உதவும்."

ஹரியானா, கர்நாடகா, திரிபுரா, மேற்கு வங்கம், பஞ்சாப், மிசோரம், ஆந்திரப் பிரதேசம், கேரளா, குஜராத், தமிழ்நாடு, அருணாச்சலப் பிரதேசம், சிக்கிம், அசாம், மணிப்பூர் மற்றும் ராஜஸ்தான் உட்பட 15 மாநிலங்கள் ஏற்கனவே புற்றுநோயை அறிவிக்கப்பட வேண்டிய நோயாக அறிவித்துள்ளது, அதே நேரத்தில் நாடு தழுவிய அமலாக்கம் அவசியமாக உள்ளது. உலகளவில், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ், ஸ்காட்லாந்து, டென்மார்க், நோர்டிக் நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இஸ்ரேல், கியூபா, புவேர்ட்டோ ரிகோ மற்றும் காம்பியா உட்பட 12 க்கும் மேற்பட்ட நாடுகள் புற்றுநோய் மிகவும் கொடிய நோய் என அறிவித்து அதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்துள்ளன.

இந்த செய்தியாளர் சந்திப்பில் அப்போலோ மருத்துவமனைகள், மருத்துவ சேவைகளின் இணை இயக்குனர் டாக்டர் பிரவீன் ராஜன், மருத்துவ புற்றுநோயியல் நிபுணர்கள் டாக்டர். முத்துகுமாரசாமி, தேவானந்த், தீனதயாளன், அறுவைசிகிச்சை புற்றுநோயியல் நிபுணர்கள் சதீஷ் ஸ்ரீனிவாசன் மற்றும் மார்க்கெட்டிங் பிரிவு பொது மேலாளர் மணிகண்டன் மற்றும் புற்றுநோயியல் ஒருங்கிணைப்பாளர் பிரேம் டேனியல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பிப்ரவரி 21ம் தேதி முதல் மார்ச் 2ம் தேதி வரை சிவகங்கை மாவட்ட புத்தகத்திருவிழா! ஆட்சியர் தகவல்

சிவகங்கை, பிப்.5

சிவகங்கை மாவட்டம், 2025ஆம் ஆண்டு புத்தக திருவிழா முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், அனைத்து துறை அரசு அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மேற்கொண்டு தெரிவிக்கையில்,



சிவகங்கை மாவட்டத்தில், கடந்த மூன்று ஆண்டுகள் சிறப்பாக நடைபெற்ற புத்தக திருவிழா, இந்தாண்டும் 2025ம் ஆண்டுக்கான புத்தகத்திருவிழா, பிப்ரவரி 21ம் தேதி முதல் மார்ச் 2ம் தேதி வரை, சிவகங்கை மன்னர் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் சிறப்பாக நடைபெற உள்ளது.

இப்புத்தகத்திருவிழாவில், நூற்றுக்கும் மேற்பட்ட பதிப்பகத்தார்களின் பல்வேறு தலைப்புகளிலுமான இலட்சக்கணக்கிலான புத்தகங்கள், நாள்தோறும் தலைசிறந்த பேச்சாளர்களின் சொற்பொழிவுகள், சிந்தனை பட்டிமன்றங்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவமாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. அத்துடன், குழந்தைகளுக்கான திரைப்பட அரங்கு, அறிவியல் கண்காட்சிகள், கல்லூரி மாணவர்களுக்கு, வேலை வாய்ப்பினை வழங்கும் போட்டித்தேர்வுகளுக்கான நிகழ்ச்சிகள், அரசு அலுவலர்களுக்கிடையேயான பல்வேறு போட்டிகள் போன்றவையும் இடம் பெற திட்டமிடப்பட்டுள்ளன.

சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் தங்கள் குடும்பத்துடன் இப்புத்தகத்திருவிழாவிற்கு வருகை தந்து, கலை நிகழ்ச்சிகளை கண்டுகளிப்பதுடன், புத்தகங்களையும் வாங்கி, தங்களது வாசிப்பு திறனை மேம்படுத்திக்கொண்டு பயன்பெறும் வகையில், இப்புத்தக திருவிழாவானது சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேலும், நல்ல படைப்பாற்றல் கொண்ட எழுத்தாளர்கள், தாங்கள் எழுதிய புத்தகங்களை புத்தகத்திருவிழா நடைபெறும் நாட்களில் வெளியிடுவதற்கு ஏற்றவாறு, முன்னதாகவே, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிப்பிரிவில் ஒப்படைத்திடவும் அறிவுறுத்தப்படுகிறது.

கடந்த ஆண்டுகளில் நமது சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக நடைபெற்ற புத்தக திருவிழாவை இந்தாண்டும் சிறப்பாக நடத்திட அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து, தங்களுக்கான ஒதுகப்பட்டுள்ள பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ், அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி அவர்கள், மகளிர் திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துக்கழுவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ரமேஷ் உட்பட அனைத்து துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கையில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் முகாம்

சிவகங்கை, பிப்.5

சிவகங்கை மாவட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்ட முகாம் வருகின்ற 19.02.2025 அன்று சிங்கம் புணரி வட்டத்தில் நடைபெற வுள்ளதையொட்டி, வருகின்ற 13.02.2025 முதல் 17.02.2025 வரை சிங்கம்புணரி வட்டத்திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில், பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.



மக்களை நாடி, மக்கள் குறைகளைக் கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின்படி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அனைத்து மாவட்ட அலுவலர்களும் வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு 2025 ஆம் ஆண்டிற்கு சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டத்தில் வருகின்ற 19.02.2025 அன்று "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டம் நடைபெற உள்ளதால் துறை அலுவலர்கள் பொது மக்களிடம் வந்து மனுக்களைப் பெற்றுக் கொள்வார்கள். இருப்பினும், பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பான மனுக்களை நேரில் கொடுக்க விரும்பினால் வருகின்ற 13.02.2025 முதல் 17.02.2025 வரையிலான அரசு அலுவலக நாட்களில் சிங்கம்புணரி வட்டத்திற்குட்பபட்ட பேரூராட்சி அலுவலகம், கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161